
# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

-265-


| | | |
|---|---|---|
| மலர் 2<br>இதழ் 7 | விக்ருதி ஞ ஐப்பசி மீ<br>அக்டோபர்—நவம்பர்—1950 ஞ | விலை<br>அணா 2½ |


ACC. NO. 18580.



சுப்பிரமணியக் கடவுள் வீரபாகு தேவரை
சூரபத்மனிடம் தூதனுப்புதல்
(காந்தபுராணச் சித்திர விளக்கம்—17)

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாரக்காரன் | (திருப்புகழ்மணி) | ... 1 |
| 2. | பழநியாண்டவர் மயில்விடு தூது | (T. K. விவேகானந்தம் பிள்ளை) | ... 4 |
| 3. | திருக்கழுக்குன்றத்தின் மாட்சி | (இளவழகனார்) | ... 9 |
| 4. | பன்னிரு திருமுறைகளிலுள்ள இயற்கை நயங்கள் | (க. சோமசுந்தரம் செட்டியார்) | ... 14 |
| 5. | கந்தர் கலி வெண்பா | (ரசபதி) | ... 16 |
| 6. | வாழ்க்கையும் வழிபாடும் | (அ. ராமமூர்த்தி) | ... 20 |
| 7. | ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் | (V. S. வேங்கடராமன்) | ... 26 |
| 8. | அடியார் ஞாயிறு திருக்கூட்டம் | | ... 29 |
| 9. | விதியும் மதியும் | (ராமன்) | ... 30 |
| 10. | தில்லை நடராஜப்பெருமான் | (வைசம்பாயனன்) | ... 32 |
| 11. | பக்தியும் இசையும் | (கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை) | ... 34 |


---

### 'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ᳚ முதல் பங்குனிமீ᳚ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0 அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை

---


சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

**பி. டி. பாணி அண்டு கம்பெனி**

17, வேங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

---

Regd. Trademark "EVEREST" Telephone 2305

**P. R. NATHAM & CO.,**

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

*Sole Distributors of* :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் 2 | விக்ருதி ஞூ ஐப்பசி மீ<br>அக்டோபர்—நவம்பர்—1950 | இதழ் 7 |
|---|---|---|

# வாரக்காரன்

## (திருப்புகழ் மணி)

மனம் என் நிலம். உழுது சாகுபடி செய்ய எனக்கு ஆற்றலும் இல்லை. சாகுபடி செய்யும் வழியும் அறியேன். வித்தும் கையில் இல்லை. வாங்கும் இடமும் அறியேன். வாங்கவும் பொருள் இல்லை. சாகுபடியாகாத நிலத்தை கண்ணால் பார்க்கவும் கூடவில்லை. கள்ளிகள், முள்ளு, மேடு, பள்ளம் இவைகளுடன் ஆபாஸம் நிறைந்த இடமாக அக்கம் பக்கத்தில் இருக்கும் நிலக்காரர்கள் இழிவாய்க் கருது கிறார்கள். மேலும் பாம்பும், பூச்சியும் நிறைந்து விடுகின்றன. ஓநாயும், குள்ள நரிகளும் வசித்து ஊளையிடுகின்றன. நிலத்தை சரியாய் வைத்துச் சாகுபடி செய்ய அறியாமல் திகைத்து நின்றேன்.

---

திரிபுர தகனு நிடமதில் மகிழ்வார் திரிபுரை யருள்சீர் முருகோனே
சததள மலர்வார் புனைநதி கழலார் தருநிழல் புகவே தருவாயே.

ஒரு நாள், என் நல்ல வேளையின் காரணமாகத் தான் இருக்கவேண்டும், ஒரு பண்ணையாள் வந்தான். நிலத்தை சாகுபடி செய்ய ஒப்புக் கொண்டான். குடிவாரம் நீ எடுத்துக் கொண்டு மேல் வாரம் எனக்கு என்ன கொடுப்பாய் என்று கேட்டேன். அவன் வேடிக்கையாய்ப் பேசினான். தான் சாகுபடி செய்ய எடுத்துக் கொண்டு விட்டால் குடிவாரமே விளையாதாம். பூமியில் விளைவது எல்லாம் மேல்வாரமாய்த்தான் விளையும் என்றான். அப்படியானால், சொல்வது விளங்கவில்லை; நிலக்காரனாகிய எனக்கு என்ன தான் வாரம் கொடுப்பாய் என்று கேட்டேன். விளைவதெல்லாம் உங்களுக்கு வாரமாய் கொடுப்பேன் என்றான். இவன் பயித்தியக்காரனாய் இருக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் பயித்தியமாகத் தோன்றவில்லை. பரீக்ஷயாக வாவது பார்ப்போம் என்றேன். நல்லது; என் நிலத்தை இன்று முதல் சாகுபடி செய்யுங்கள் என்று சொல்லி விட்டு விட்டேன். அவனும் ஒத்துக் கொண்டான். தானியங்கள் எல்லாம் விளைந்தன. முழுதும் மேல் வாரமே என்று கொடுத்தான். பொன் போட்டால் பொன் விளையும், வேண்டுமானால் இந்நிலத்தில் விளையாதது ஒன்றுமில்லை யென்றான். பொன் விளையும்; மணி விளையும்; குணம் விளையும்; நலம் விளையும்; முத்தியும் விளையும் என்றான். ஆசை மிகுந்து விட்டது. "முத்தி விளைவித்துக் காட்டினால், நான் உன் அடிமையாய் விடு

---

குலவினை களையுங் கழல் தொழும்
இயல்தந்து அருள்வாயே.

வேன்'' என்றேன். "நான் உன் அடிமை சேவைக் காரனாய் பயிர்த்தொழில் செய்து வருகையில் நீ எனக்கு எப்படி அடிமையாக முடியும்'' என்றான். அடிமைக்கு அடிமையானால், நீயும் சாகுபடி செய்யும் படி வந்திடும்! உம்மால் முடியுமா" 'என்றான். ஒன்றும் விளங்க வில்லை. 'ஐயா, நீ சாதாரண குடியானவன் அல்ல என்று தோன்றுகின்றது. நான் உனக்கு அடிமையானால், என்ன தான் எய்தும்' என்றேன். அவன் உரு மாறிற்று. அற்புத ரூபத்துடன் முன்னின்றான். "அடிமைக்கு அடிமையானால் உன் எஜமானன் சாகுபடி செய்வான். விளைவதெல்லாம் உனக்குக் குடிவாரமாய் அளந்து விடுவான் பார்'; என்றான். அவன் பார்வையிலேயே என் ஆணவ அழுக்கு எல்லாம் ஒழிந்தது. பார்த்த குளிர்மையிலே அனுபூதியெனும் சிவபோகத்தை நிரப்பி விட்டான். வியப்படைந்த யான் 'நீ யார்?' என அவனை வினவ, உருவமாறி குமரகுருபரனாய் நின்று அருள் புரிந்து உளத்தில் கோவில் கொண்டான். இந்த அனுபவத்தை ஒவ்வொரு தொண்டரும் அடைவார்கள். அருணகிரி இதை விளக்குகின்றார்:

*ஆனபய பக்தி வழிபாடு பெறுமுத்தி அதுவாக*
*நிகழ் பக்தஜன வாரக்காரனும் மேதகுகுறத்தி*
*திருவேளைக்காரனே"*

---

கசடமுடனே யாளவுமே அருள் கருணை வாரியே
இருநாயகி கணவனே உனதாளிணை மாமலர் தருவாயே.

# பழநியாண்டவர் மயில் விடு தூது

(T. K. விவேகானந்தம்பிள்ளை; B.A.L.T)

தான் காதலித்துத் திருமணஞ்செய்துகொண்ட தலைவனை விட்டுப் பிரிந்து தலைவி தனியே இருக்கிறாள். தலைவன் திரும்ப வரவேண்டிய காலமும் கடந்து விட்டது. பிரிவாற்றுமைக்கு வருந்துகிறாள் காதலி. பிரிவு நோயால் தன் மனம் படும் பாட்டை தலைவனுக்கு எடுத்துச் சொல்ல தூதுக் குகந்த பறவைகளையும், பொருள்களையும் பெருமை படுத்தி, ஒவ்வொன்றின் மூலமாக தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்கிறாள். இது சிற்றின்ப காதல்.

தூதிலே ஈடுபடக் கேட்கப்படும் பறவைகளுமாவன, அளி(வண்டு), குருகு(கொக்கு), வாரணம் (சேவல்), நாரை, கபோதகம் (புறு), அன்றில், குயில், பூவை, கிளி, மயில், மான், புகையிலை, தமிழ், பொன்.

பசு(உயிர்)பிறப்பிறப்புக்களில் விட்டகலாப் பாசத்தால் கட்டுண்டு உழன்று, திரியும்போது, பதியைநோக்கி பசப் புற்று வருந்தி அவனை அடைய விரும்புவதே வீட்டு காதல் எனப்படும். இது பேரின்பகாதல். உள்ளங்கவர்ந்த கள்வனைக் காணவும், அவன் திருநாமத்தைக் கேட்கவும் மனம் அவாவுகிறது காதல் முறையிலே ஆண்டவனை நோக்கி தூது என்ற அகப்பொருள் இலக்கணத்தால் தன் பாட்டுக் கிணையில்லாச் சம்பந்தன் சிவகதிக்கு வழிகாட்டி பரிந்து பாடியுள்ள பாடல்கள் சிறந்த இன்பம் தருவதுடன் நம் பந்தமும் அறுத்தெரியப்படக் காரணமாகிறது. தலைவி கூற்றுகச் சம்பந்தப் பெருமான் தோணிபுரப் பதிகத்தில்

---

தாழ்விலுயிர் வீழ்பட்டுழ்வினை விடாமற்
சாவதன்முனேவற் கொண்டிடாயே.

கூறிய தூதின் பொருள் அறிந்தார் சிவபோகஞ் சேர்வார் என்று அவரே கூறுகிறார். இங்கே தலைவி உயிர். தலைவன், பதி. தூது செல்வோர் பூதாதி தத்துவங்கள்.

திருஞானசம்பந்தன் சேவடியை சென்னிமேற் கொண்டு தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் ,தலை சிறந்த தொண்டாற்றிவரும் கவியரசு கு. நடேச கவுண்டரவர்கள், தலைவியுள்ளங்கொண்டு, தலைவனாகிய பழனியாண்டவனை அடைய அவாவுகிறார். மயிலை தூதாக விடுகிறார். தமிழ்ச்சுவை, பொருட்சுவை, பத்திச்சுவை, நனி சொட்டச் சொட்ட மயில் விடுதூது விண்ணப்பித்துள்ளார். அவ்வாறு பரிந்து பாடிய பாடல்களின் சுருக்கத்தை உரை நடையில் எழுதலானேன்.

சுப்பிரமணியன் ஒப்பறு பெறுமை:—

பழநியாண்டவர் மயில் விடுதூது சுமார் நானூறு கண்ணிகளையுடையது. சுப்பிரமணியன் ஒப்பறு பெறுமை 1-21 கண்ணிகளில் விளக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த சாத்திரங்களில் கண்ட நுண்ணிய உண்மைகளை சுருங்கிய முறையில் விளக்கப்படுகிறது. இக்கண்ணிகளின் பிற்பகுதி, சுப்பிரமணியன், முருகன், குருசாமி, குகன், குமாரன் என்னும் இளம் பூரணனது திருநாமங்களின் பெயர்க் காரணத்தை விளக்குவதாய் அமைந்தன.

சுப்பிரமணியன், திருமாலும், பிரமனும், இந்திரனும், நான்கு வேதங்களும், தேவர்களும், ஏனையயாவர்களும் ஆராய்ந்தறிதற்கரியவன். அவன் அனாதி. யாதொரு குறியும், குணமுமில்லாத தலைவன். ஞான நெறியால் அறிவை

---

**பிழைபொறுத் தாயெனப் பழுதறுத் தானெனப்**
**பிரியமுற் றேத்திடப் பெறுவேனே.**

அறியும் அறிஞர்கள் உள்ளத்துள் இடைவிடாது வீற்றிருக்கும் பரமசிவம் அவனே. சிவத்தை அறியும் அறிவுக்கு அறிவானவன். அவ்வறிவிலே இடையறாது ஊறும் பேரின்ப வெள்ளமும் அவனே. உயிர்கள் மும்மலநோய் நீங்கி உய்யும் பொருட்டு வைத்த கருணையினால் உரு, அரு, அருஉரு என பல வடிவங் கொள்வான். அவ்வடிவங்களும் தன்னை வழிபடுவாரது பக்குவத்திற் கேற்றபடி இருக்கும். கலப்பால் எல்லா உயிர்களும் அவனே. சிறப்பால் அந்த உயிர்கள் அல்லாதவனும் அவனே. ஆதலால் அவன் அத்துவிதப் பொருளாய் உளன். அவன் அருளால் அவனை அறிவது அல்லாமல் இவன் இன்ன தன்மையை உடையவன் என்று யாராலும், எக்கருவியாலும், தெரிவிக்க முடியாதவன். எல்லாச்சமயத்தாரும் தத்தம் அளவுகளால் அளந்தறியும் அவ்வப் பொருளாக இருப்பவனும் அவனே. வேதங்கள் கூறும் பிரமமும் அவனே. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலும் செய்கின்ற சதாசிவமும் அவனே. ஓம் என்ற பிரணவத்தின் பொருளும் அவனே. ஒருவரால் படைக்கப்படாத திருஉருவமும், மாறாத இளமையும், நீங்காத தெய்வ மணமும் பொருந்திய முருகனும் அவனே. எண்ணாயிரங்கோடி மன்மதர்கள் அழகு ஒருங்கு திரண்டாலும், இவனழகின் காலடிக்கும் ஒப்பாது. பிரணவத்தின் பொருள் அறியாத பிரமனைச் சிறையிலே வைத்து, வணங்கிய தந்தைக்குச் செம்பொருள் உபதேசித்து ஆட்கொண்ட பரம குருசாமியும் அவனே. நெடுமாலைக்கையாற் குறுக்கிய அகத்திய முனிவருக்கு அருள்

---

**அருணை நகர்மிசை கருணையொ டருளிய**
**மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே.**

புரிந்த குருநாதனும் அவனே. எல்லா உலகங்களும் தனக்கே உடைமையாக, ஒருவருக்கும் உடைமை ஆகாத குகசாமியும் அவனே. மன்மதன், "தான் முன்னமே அரன்விழி நெருப்பில் மாய்ந்தது நன்று" என்று எண்ணும்படி அவனைத் தாழ்த்தும் குமாரசாமியும் அவனே. ஆன்மாக்களின், தனியாக உள்ள மும்மலக்குற்றங்களை யும் நீக்கும் குமார பரமேசனும் அவனே. உயிர்களின் உள்ளக் குகையில் மேவிய குகனும் அவனே. உயிர்களா கிய சேனைகளுக்குத் தலைவனாகிய சேனாதிபதியும் அவனே. எத்தனையோ கோடிக்கணக்கான பெயர்கள் படைத்த முழு முதற்பொருளும் அவனே.

**அறுமுகப்பரமன் அமர்படைவீடு:**

அப்பெருமான் குன்றாத அன்புடையாரின் பிறவி விடாய் தீர்க்கும் பரங்குன்றும், கடல் அலையிற் சங்கு முழங்கும் செந்தில் நகரமும், சித்தர்குழாம் சேவிக்கும் திருஆவினன் குடியும், நீரகத்தால் அந்தணர் வழிபடும் ஏரகமும, தினைப்புனங்களிலும் குறவர் குன்றில்களிலும், அருவி, முத்துக்களை இறைக்கும் குன்றங்களும், முகில் முழவுபோல் முழங்க மயில் ஆடுகின்ற பழமுதிர் சோலை யும், சிறந்த திருவிழாக்கள் நிறைந்த நகரங்கள் பலவும் கோயிலாக்கொண்டு, வீற்றிருந்து மன்னுயிர்கட்கு இன்பம் வழங்குகின்றான்:—

**பழனிமலையின் பலபெரும் சிறப்புக்கள் :**

அப்பதிகள் அனைத்திலும் திருவாவினன்குடியே செவ் வேட்பிரானுக்குச் சிறந்த திருக்கோயில். தமிழ் மூவேந்தரில்

---

**அலையு மெனதுயிர் அநுதின நெறிதரு**
**மவுன சிவசுக சலதியில் முழுகுவ தொருநாளே.**

முதல்வர் சேரர். அவரிலொருவர் நடராசரின்சேவடிச் சிலம்பொலியை நாடொறும் கேட்கும் அருட் செவி படைத்தவர். மன்னுயிர்கள் எண்ணியவற்றை எண்ணிய வாறே அறிந்து நீதி செலுத்திய சிறப்பால் கழறிற்றறி வார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். முதலை உண்ட பாலனை மீட்ட தம்பிரான்றோழருக்கு (சுந்தரர்) நண்பர். அந்த நம்பியாரூரர் யானைமேல் கயிலை செல்லத் தாமும் குதிரைமேல் உடன் சென்றவர். ஆதி உலா ஆகிய அமுதை அரன் செவியில் வார்த்தவர். அச்சேரனுடைய ஆட்சியில் உட்பட்டது கொங்குநாடு. கொங்கின் ஒரு பகுதி வைகாவூர் நாடு. அதில் ஆதி வராகமலை. அதற்கு அண்மையில் கோங்குவனம். உமையாள் தவம் செய்த கூவிளவனம். திருமகள் நோற்ற குளிர்பொழில். தேவர், ஆவும், சூரியனும் தவம் செய்த நெல்லிவனம் என்பவற்றாற் சூழப்பட்டது திருஆவினன்குடி. அங்கே செந்நெலும், கன்னலும் ஒருங்கும் வயல்கள். நீலப் பட்டுக்குடையை விரித்து நிறுத்தினாற்போன்ற கமுகஞ்சோலை. பொற்குடம் போன்ற நெற்றுக்கள் நிறைந்த தென்னஞ்சோலை. கொலை யானைக் கைமுகம்போன்ற குலைவாழைக்காடு. மாஞ்சோலை, பூஞ்சோலை மலர்வாவி முதலியன அந்நகரத்தின் நாற்றிசை யிலும் நிறைந்துள்ளன. மாளிகைகள், சூளிகைகள் நிலா முற்றம் நிறைந்துள்ளன. செவ்வேட்பிரானுக்குச் சிறந்த தலம் இது என்று ஆன்றோர்கள் பலரும் கூறக் கேட்டு மகிழ்ந்தேன். பண்டைத் தவப்பயனும் தூண்டிற்று. அப் பதியை அடைந்தேன். சரவணப் பொய்கையில் நீராடி னேன். நீறணிந்தேன். ஆறு எழுத்து எண்ணினேன்.

---

**உன் அடியரொடு ஒருவழிபட**
**இருதமர பரிபுர சரணமு மவுனமும் அருள்வாயே.**

பின் திருவாவினன்குடியிற் செவ்வேளை வணங்கி விடை பெற்றேன்.

வெண்பா

"வேண்டவனைத் துங் கொடுக்கும் வேலவனைச் சீலருளத்
தாண்டவனைத் துங்க மிகுதண்பழனி—யாண்டவனைச்
சின்மயனையின் றுணையைச் செவ்வேளையில் வேளை
பொன்மயிலே கொண்டென் பாற்போது
தோகைமயிலே றியிரு தோகையர்கள்பாலமர
வாகைபுனைவேலைவலத்தேந்தி—யோகையொடும்
வந்தடிமை சிந்தைகுடிவாழ் பழனியாண்டவா
பந்தவினை தீரருட்கண்பார்." (தொடரும்)

# திருக்கழுக் குன்றத்தின் மாட்சி!

இளவழகனார்

நூறு காரணம்

1. திருக்கழுக்குன்றம் உலகறிந்த திருக்கோவில்; கழுகுக் காட்சி காணும் பொருட்டு உலகின்பல்வேறு நாட்டவரும் இங்கு வந்து செல்கின்றனர். மஹாபலிபுரம் முதலிய இடங்களுக்குச் செல்லும் உலக வழிப் போக்காளர், இடையே தங்கித் தொழும் திருப்பதி!

2. இந்தியப் புகழுடையது; காசி இராமேச்சுரத்துடன் தொடர்பு உடையதாய் இந்திய வழிப் போக்காளரால் தொழப்பெறுவது! வடநாட்டார் பெரும்பாலும் 'பட்சி தீர்த்தம்' என்னும் பெயரால் இதனை வழங்குவர். காசி ஆறுடையது; கழுக்குன்றம் மலையுடையது; இராமேச்சுரம் கடலுடையது.

---

பலபாடு பட்டு புழுக்கொள் மலக்குகை
விடுகட்டி யீடுக்கு மெனக்கு நின் அருள்தாராய்.

3. 'சான்றோர் உடைத்து' என்னும் தொண்டை நன்னாட்டின் திருக்கோவில் !

## II முச் சிறப்பு

4. 'மூர்த்தி' 'தலம்' 'தீர்த்தம்' என்னும் மூவகைச் சிறப்பும் ஒருங்கு பொருந்தியது.

5. மலையுச்சியில் உள்ள இறைவன் திருவுருவம் (மூர்த்தி) இயற்கையே தோன்றியது! அதனால் அந்த இடம் அருள்வல்லமை பொருந்தியதென்பது வெளிப்பட்டது ; ஆகவே, திருவுருவம் தோன்றிய இடத்திலேயே திருக்கோவில் அமைக்க வேண்டியதாயிற்று உச்சியில், பாறை அடுக்குகளின்மேல் கோவில் அமைந்ததின் வாய்ப்பு இதனால் தெரியப் பெறும்.

6. கவர்ச்சியான, தூயகாற்றமைந்த, மருத்தியல்பு, அருளியல்புகள் வாய்ந்த இடமாதலின் (தலம்) இடச்சிறப்பும் உயர்ந்தது ! வெறிக்குணம் அமைதியுறும் இடம் அது !

7. நன்னீர் அமைந்த பெரிய 'சங்கு தீர்த்தத்' திருக்குளம (தீர்த்தம்). மலைச்சாறுகள் நிரம்பிய நீரூற்றும் நீர் வரவும் உடையது; நோய் தீர்த்துப் புத்துணர்வும் புது நலமும் பயப்பது; சுவையுடையது; சங்கு பிறக்கும் நன்மையும், வளமும், புதுமையும் உடையது. சில ஆண்டுகளுக்கு ஒருகால் அத்திருக்குளத்தில் சங்கு பிறக்கிறதென்று கூறுகின்றனர்.

## . III இடப் பெருமை

8. திருக்கழுக்குன்றம, ஒரு திருப்பதிக்குரிய அமைப்புகள் பலவும் அமைந்தது; மலை, மலைக் கோவில், மலையின்

---

காலனுடல் போடத் தேடிவரு நாளிற்
காலைமற வாமற் புகல்வேனே.

சுனை, மலைப்படி, வலம் வரும் மலைப்பாதை, மலைக்காடு, ஊர், தாழக் கோவில், நீர், தங்கு நிலையங்கள் முதலியன ஆங்கு உண்டு.

9. எல்லாம் அளவில் அமைந்திருப்பது அதற்கு ஒரு மாட்சி! மலை, மிக உயரமும் மிகப் பெரியதும் மிகச் சிறியதுமின்றி அளவாய் விளங்குகின்றது! அவ்வாறே மலைக்கோவிலும் ஊரும் தாழக்கோவிலும் அளவில் திகழ்கின்றன.

10. அளவில் அமைந்திருப்பதுடன் எல்லாம் அழகாய் அமைந்திருப்பதும் அங்கே ஒரு கவர்ச்சி!

11. திருக்கழுக்குன்றம் ஆண்டவன் வழிபாட்டுக்கென்றே அமைந்த ஒரு திருப்பதி!

11. (A) பழனி பால்முழுக்குக்கும், திருச்செங்கோடு திருநீற்று முழுக்குக்கும் சிறந்தவாதல் போலத் திருக்கழுக்குன்றம் சங்கு நீர் முழுக்குக்குச் சிறந்ததென்பர்;

12. இயற்கை நிலையம்;

13. சிறந்த மலைப்பதி;

14. நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை என்னும் நானில அமைப்பும் சூழ அமைந்து திகழ்வது! எல்லாம் காத எல்லைக்குள், சென்று காண்டற்கு எளியவாய் அருகே திகழ்கின்றன. மலைமேல் இருந்து நாற்புறமும் நோக்கி இந்நானில அழகுகளை ஒருங்கேயுங் காணலாம். கிழக்கே கீழ்கடல் அலையெறியுங் கழிக்கானல், தெற்கே பாலாறு வளஞ்சுரக்கும் பயிர் நிலங்கள், மேற்கே அங்கங்கும் அடுக்கமைந்த மலைக் கோடுகள், வடக்கே பார்வை

---

**இறையவர் கேட்கத்தகும் சொல் உடையோனே**
**தெவிய மோக்ஷத்தை என்று அருள்வாயே.**

யளவு பார்த்து கிடக்குங் குறுங்காடுகள். இங்ஙனம் நானிலத் தோற்றமும் சூழ்ந்து தோன்றும் இவற்றின் இடை யிடையே விரிந்த வெறு வெளிகளுங் காட்சியளித்தல் காணலாம்.

15. இந் நானிலப் பகுதிகட்கும சென்றுவர, திருக் கழுக் குன்றத்தில் பாதைகள் உண்டு. இது, பல பெரும் பாதைகளின் சந்திப்பிடமாய் நடுக்குத்தாய் விளங்கு கின்றது.

16. மகாபலிபுரம், சதுரங்கபட்டினம், கருங்குழி, செங்கற்பட்டு, போரூர் முதலிய வரலாற்றுச் சிறப் பமைந்த ஊர்கள் சூழ்ந்து திகழ்வது! இந்த ஊர்களுக்கு நாலாபக்கமும் பெரும்பாதைகள் கிளை பிரிந்து செல்லு கின்றன.

17. எல்லா இடங்கட்கும் சென்றுவர ஊர்தி வசதிகள் உண்டு.

## IV தொழுகை யிடம்

18. திருக்கழுக்குன்றம் சிறந்த தொழுகையிடமாய் இருத்தலின், வெளியூர் மக்கள் வந்து தங்கும் தங்கு நிலைய மாகவே இன்றும் அதுகாட்சி யளிக்கின்றது.

19. தங்கு மாடங்கள் அங்கு பேரளவில் உள்ளன.

20. கோவில் தொண்டுகள் புரிவோர், ஊரில் இல்லம் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். கோவிலுக்காக ஊர் அமைந்ததே யல்லாமல் ஊருக்காகக் கோவில் அமையவில்லை.

---

அறிவே யழிந்து அயர்வாகி நைந்து
அடியேன் மயங்கி விடலாமோ.

21. மலையடிவாரத் தெருவும், தாழக் கோயிலைச்சுற்றி நாற்புறமும் அமைந்துள்ள பெருந் தெருக்களும், சங்கு தீர்த்தத்துக்குச் செல்லும் முன்னிலைத் தெருவும் என இவ்வளவே ஊரின் பொது அமைப்பு. எனவே, ஊர் அமைந்ததன் நோக்கம் இறை போற்றுதலே என்பது இத னாலும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

22. திருக்கழுக்குன்றம் என்பது மலையின் பெயர்; அதுவே ஊரின்பெயராய் அமைந்து வழங்குகின்றது. மலைச் சிறப்புக்காகவே ஊர் அமைந்த உண்மை இதனாலும் இனிது வெளிப்படும்

23. மக்கள் இன்னும் திருக்கழுக்குன்றம் செல்வது பெரும்பாலும் ஆண்டவன் வழிபாட்டுக்கேயன்றி, வாணி, பம் முதலிய வேறு நோக்கங்களுக்கன்று. பிற எவையும் அங்கே தலைகாட்டாமல், இறைவன் பெருமை ஒன்று மட்டுமே ஓங்கியிருப்பது நல்லதுதான்!

தொழுகைக் கென்றே ஒரு மலைப்பதி தொண்டை நாட்டில் உள்ள தென்னும் அருமைசிறந்தது திருக்கழுக் குன்றம். தொழில் வாணிபம் முதலியவற்றைக்கருதுவோர் வேறெங்கானும் செல்வர், இறையின் இயற்கைவழி பாட் டில் தோய்ந்திருக்கும் அமைதியை விரும்பும் காலங்களில் மட்டும, மக்கள், திருக்கழுக்குன்றம் செல்வர், என்னும் படி இத்திருப்பதி அமைந்திருக்கின்றது. திருக்கழுக்குன் றத்தின் ஊர் ஆட்சி மன்றத்தார் இந்நிலையை என்றும் பாது காத்து வருதல் நல்லது; பெரிய நகரமாக்காமலும் தொழிற் சாலைகள் வாணிப நிலயங்கள் பெருக்காமலும்,

---

பாவத்துக்குத் தக்கவை பற்றித் திரியாதே
பாடப் பத்திச் சித்தம் எனக்குத் தரவேணும்.

ஊரமைந்த முன்னை நோக்கத்தை நன்கு கருதி அதற்கேற்ப ஆட்சி புரிந்துவருதல் தக்கது; உழவுக்கும் தொழிலுக்கும் பிறவற்றிற்கும் வர்த்தனை செய்யும் இடங்கள் பிறவாயிருக்கட்டும்; இறைவந்தனை மட்டும் செய்யும் இடம் இதுவாய் இருக்கட்டும். உலகமெல்லாம் ஊராய் அவ்வூர்களின் இடையில் திருக்கழுக்குன்றம் இறையருட் கோவிலாய் இலங்கட்டும்.

# பன்னிரு திருமுறைகளிலுள்ள இயற்கை நயங்கள்

[க. சோமசுந்தரம் செட்டியார்]

சைவசமயாசாரிய மூர்த்திகளுள் முதல்வராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் ஸ்தல யாத்திரை செய்து வரும் தொடர்ச்சியில் திருமுதுகுன்றம் எனும் விருத்தாசலம் அல்லது பழமலையையடைந்தார். அங்கு மணிமுத்தாற்றில் நீராடினார். நித்திய கருமங்களை முடித்துக் கொண்டார். அடியார் கூட்டத்துடன் திருக்கோயிலுக்கு வழிபாட்டிறகாகச் செல்கின்றார். வழியிலுள்ள வயல்களையும், மரச் செறிவுகளையும் கண்டார். இயற்கை வளத்தைப் பாராட்டி வுள்ளதை யுள்ளபடியே பாட்டிலமைத்துக் காட்டுகின்றார்.

சிவனுக்கு மிக உகப்பான பழங்கள் மூன்று. அவை வாழை, மா, பலா ஆகும். இவற்றையே முக்கனி என்பார்கள். இவற்றால் சிவனை அபிஷேகித்தால் கிரம்பப் பல

---

**அநேக விகற்ப விபரீத மனோ பாவத்துக்கு அதீதாய**
**மவுன பூரித சத்திய வடிவினை மாயாமற்குப் புகல்வாயே.**

ளுண்டு என்று நூல்கள் கூறும். ஆதலால் பழமலை யில் இம்மரங்கள் நிரம்ப விருந்தன. எல்லா மரங்களிலும் பழங்கள் பழுத்துக் கனிந்து சாற்றை யொழுக்க விட்டிருந்தன. ஏன்? அக்காலத்தில் மக்கள் சிலர். வளம் அதிகம். ஆதலால் மக்கள் உண்டும், பழங்கள் அதிகமாக விருந்தன. இதைப் பொருளாதார நூல்கள் (Economics) விளைவு அதிகம், தேவை குறைவு என்று சொல்லும். (Demand and supply) என்று சொன்னால் எளிதில் விளங்கும்.

வாழைமரங்களிலுள்ள குலைகள் பழுத்துக் கனிந்துறைந்து இருந்தன. இதனால் அப்பழச்சாறு கீழேயொழுகி நிலத்தில் படிந்து ஓட ஆரம்பித்தது. ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் இருந்ததால் அம்மரங்களிலிருந்த கனிகளின் சாறு வெள்ளமாய் ஓடி வயல்களில் சேர்ந்து சேறாக இருந்ததென்றால் மிகையாகாது. இது போலவே மாமரங்கள் அதிகமாகப் பருவகாலத்தில் பழுத்திருந்தன. அப் பழங்களையும் அறுப்பாரில்லாமையால் பழங்களெல்லாம் கனிந்து தேனைக் கீழே சொட்ட விட்டிருந்தன. இந்த பழரசமும் ஆறாக ஓடிப் பக்கத்திலுள்ள வயல்களில் தங்கிச் சேறாக விளங்கியது. இதுமட்டுமா? பலாமரங்களுமிருந்தன. அவற்றிலும் பழமரங்கள் வேர்ப்பாகத்தில் பழுத்து வெடித்துச் சுளைகளிலிருந்து ரசத்தை வடியச் செய்தன. இந்தச் சாறும் அதிகமாகப் பெருகி வரவே, இதுவும் வயல்களிலுள்ள மண்ணையெல்லாம் சாமாக்கிச் சேறாக்கியது. இது புனைந்துரை (Exageration) என்னலாகாது. ஏன்? அக்காலத்து (Demand) தேவை குறைவு; (Supply) வளம் அதிகம். இதனால்தான இது புனைந்துரை

---

வேதாந்த பரமசுக விடாம்பொருள்
உதவிய பாதாம்புயம் அருள்வாயே.

யல்ல என்றது. தென்ன மரங்களின் வளத்தையும் சேர்த்துக் கூறியுள்ளார் நமது ஞானசம்பந்த சுவாமிகள்.

இனி இக்கருத்தை விளக்கும் பாட்டைப் பார்த்துக் களிகூர்வோம்.

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்திரன்
எச்சனருக்கனங்கி
மிக்கவிதா தாவினேடும் விதிவழியே
தண்டித்த விமலர் கோயில்
கொக்கினிய கொழும் வருக்கை கதலிகமுகு
உயர்தெங்கின் இவைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுவரா
நீள்வயல் சூழ் முதுகுன்றமே"

தொடரும்

## கந்தர் கலிவெண்பா

ரசபதி

### ஈறுத வாழை

குலையிலாத வாழை ஒன்று. அதன் உள் இருப்பைக் காண முயன்றான் ஒருவன். மட்டையை உரித்தான். அதனுள் ஒரு மட்டை இருந்தது. அதையும் உரித்தான் அதனுள்ளும் ஒரு மட்டை யிருந்தது. இப்படி மட்டையை உரித்துக் கொண்டே போகிறான். உரித்து உரித்து உள்ளிருந்த குருத்தையும் விரித்து விடுத்தான். அதனுள், சுட்டுதற்கு அமைந்த ஒன்றும் இல்லை. இவ்வளவு தானு என வியந்தான் அவ்வளவில் முயல்வு அகன்றது. கண்ணும் கருத்தும் உண்மையைக் கண்டன வாழையிலிருந்த மட்டைகள் கழிந்த பின், வாழை யெங்கே?

---

**எப்பற்றுக்களும் அற்று குறியோடுஞ் சுத்தப்பத்தர்**
**இருக்கும் குருபதம் சிந்திக் கைக்கருள் சற்றுங் கிடையாதே.**

### கூத்தும் குறிப்பும்

பார்ப்பனக கூத்தர் ஒருவர் தோட்டி வேடம் போட்டார். எனினும், இது பொய் வேடம்; நான் தோட்டியல்ல என்று அப்போதே தன்னை வேறு நின்று காண்பர் அவர். அது போல், கருவிகள் எனப் பெரும் தத்தவ நடுவில் இருக்கும் ஆன்மா அதன் மயமாய் அழியாமல் அவைகளி னிருந்து தன்னை வேறு பிரித்து அறியுமெனில் அதன் பின் மயக்கும் ஆற்றல் அக் கருவிகட்கு இல்லை.

### தத்துவமல்ல தான்

உதிரம், மயிர்த் தொகை, தசை, தோல், என்பு, மூளை முதலிய தத்துவக் கூட்டத்தால் ஆன உடல் இந்த உடல். இதனுள் இருக்கும் ஆன்மா, யான் எனத் தன்னைச் சுட்டு மெனில், அந்த யான் எனும் சொல்லிற்குப் பொருள் யாது? பெரும்பாலோர்க்கு இன்று வரை இது புரியாப் புதிர்.

### அகங்கார மமகாரம்

பயன் தரு கருவி நூற்களைப் படித்தவரும் பலர் உளர். யான் செய்தேன்! யான் சொல்கிறேன் என்று உலகியல் தொடர்பில் அவர்களும் உரையாடல் செய் கின்றார். இதனுடன், எனதுடைமை, எனது குலம், எனதுறவு என ஆசை விளைவிக்கும் அவதிகட்கோ ஒரு வரையறை யில்லை.

யான் என்பது செறுக்கு நிலை. எனது என்பது வேட்கை நிலை.

---

**திருவுளம் பற்றிச் செச்சை மணக்கும்**
**சிறுசதங்கைப் பொற்பத்ம மெனக்கு என்று அருள்வாயே.**

தான் அல்லாததைத் தான் எனவும், தனதல்லாததைத் தனதெனவும் கூறும் தருக்காலும், வேட்கையாலும் இறை தரிசனம் எய்துவதில்லை.

தன்னால் அறியப் பெறும் கருவிகள் அனைத்தும் சடம்; அவைகளைத் தனக்கு அறிவிப்பது அருள்.

அக் கருவிகள்போல் நீ சடமல்ல; அருளைப்போல் பேரறிவை யுடையவனும் அல்லை என்று குருமுகமாகி அறிவிக்கின்றான் அமலன். அறிவிக்க அறியும் அறிவு **தான்** என்று, அதன் பின் அறிகிறது ஆன்மா. அறிந்த பின், வாழ்க்கை ஆனந்தமாக நடைபெறும்.

### நியதி களைதல்

ஆறாறு தத்துவங்களை அதன் பிறகு ஆராயும்; அவைகளை வேறு வேறாக அறியும்; அவையெல்லாம் தனக்கு அந்நியம் என்பதை குரு மொழிப்படி ஆன்மா கண்டு தெளியும்; தெளிவு கண்ட நிலையில், நான் என்னும் தருக்கும், எனதென்னும் வேட்கையும் அழியும்; அதன் பின் விளங்குகின்றது அருட்சுடர்.

### அடி முடி தரிசனம்

செறுக்கும் வேட்கையும் சிதைந்த இடமே,
சொருப நிலையின் திருவடி தரிசனம்.

"யானெனை தென் பதற்ற இடமே திருவடி"

என்று குறிப்புணர்த்துகின்றார் குமர குருபரர். பலமுகம் பாயும் நம் மனம், ஒருமை பெற உதவுகிறது இந்த ஒரு அடி.

---

பரபதம் பற்றப் பெற்ற எவர்க்கும் பரவசம் பற்றிப் பற்றற நிற்கும் பரவ்ரதம் பற்றப் பெற்றிலன் மற்றென் துயர்போமோ.

அதன்பின், நானென்று உரைக்க நானில்லை; எனதென்று சுட்ட எப்பொருளும் இல்லை. அதன் பின்னைய விளைவில் பேச்சில்லை; மௌனந்தான் முடிவு. அதன் வழி அரும்பி மலர்ந்த இன்பம், பிஞ்சாகிக் காய்த்துக் கனிகிறது.

சிறந்து கனிந்த இந்த இன்பத்தைத்தான் சிவானந்தம் என்கின்றார் மேலோர்.

மோன பராநந்தம் முடியாக

என்ன அழகான அநுபவம்!

ஒளிமயமான உணர்வால் அடிமுடியனுபவம் கூறும் இந்த இரண்டடிகளை உணர்தர உணர்தர, தாயுமானார் வேண்டியபடி

**அடியினை யருளல் வேண்டும் அடிமுடியில்லா வாழ்வே**

என்று உமாசுதனை நோக்கி வீறிட்டுக் கூவுகின்றது நம் உள் உணர்வு.

சொருபத் திருமேனி

அடிமுடி தரிசனம்சேர்ந்த அதன் பின், சிவஞானமே யான திருமேனி சிறந்து ஒளிர்கின்றது.

அருள் வேட்கை யெழுப்பும் இச்சா சத்தியார், அந்த அருட் சுடரின் இடது விழியாக யிருக்கிறார். பணிமுகத்த ராக்கும் கிரியா சக்தி, வலப் பார்வையாக வாய்ந்துளர். ஆன்ம உணர்வில் சித்கனல் பாய்ச்சும் ஞானசத்தியார், பரஞ்சுடரின் மேனோக்காக மேவியுளர்.

வீறு கொண்டு பேறு தரும் அருளின் முழுமை, அமல கரதலமாக அமைந்துளது.

---

**கட்புலனுக் கெவ்வளவுங் காணு திருந்தெங்கும்**
**உட்புலனுய் நின்றவொன்றை யுய்ந்தறிநீ புல்லறிவே.**

சந்நிதி

வாய்மை வளரும் நிலதலம், அந்த அருட்சோதியின் திருக்கோயில். இந் நிலையில் இருந்து, அகில உலகத்திலும் உள்ள உயிர்கள் எவற்றிலும் பேதமின்றிக் கலந்து நிலவும் அருட்சுடரின் அத்துவித அநுபவத்தை உள்ளம் உருகித் தம் வேதநாவால் ஓதுகின்றார் நம் வித்தகமுனிவர்.

"யான், எனது என்பது அற்ற இடமே திருவடியா
மோன பராநந்தம் முடியாக; — ஞானம்
திருவுருவா; இச்சை, செயல், அறிவு கண்ணா;
அருளதுவே செங்கை யலரா—இருநிலமே
சந்நிதியா நிற்கும் தனிச் சுடரே—எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!"

[மோனம்—கருவிகரண சேட்டையற்ற மௌனநிலை. பர ஆநந்தம்—பராநந்தம்; பரம்—சிவம். இச்சை—இச்சா சக்தி. செயல்—கிரியா சக்தி. ஞானம்—ஞானசக்தி. அலரா—மலராக. பின்னமற—வேற்றுமை யிலாதபடி ]

ஊன்றி உணர்ந்து இவ்வடிகளை ஓதும்போதே மெய் சிலிர்த்து, ஓம் ! ஓம் ! ஓம் ! என்று ஓத ஊறுகின்றது நம் வாய் ! அதி விநயமொடு இதுவரை சொருபம் பாடிய திருவாயால், முனிவர் கூறும தடத்த திருவுருவ அற்புத அருமைப் பாடுகளை அடுத்த இதழிற் காண்பம் !

## வாழ்க்கையும் வழிபாடும்

(அ. ராமமூர்த்தி)

நமது வாழ்க்கையில் வழிபாடு ஒரு முக்கியமான அம்சம். நமது இலட்சிய சித்திக்கு அது ஒரு இன்றியமை யாத சாதனம். நமது உள்ளம் தெய்வீகமாக மலரவேண்டு

---

என்னபடித்தாலும் எம்முறையாகாதே
சொன்னது கேட்டாயோ சும்மாயிருந்துவிடு.

மானால் - ஆன்மீகத் துறையில் நாம் ஒரு சரியான பாதையைப் பின்பற்றவேண்டுமானால், அது நாம் கைக்கொள்ளும் வழிபாட்டு முறையையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது என்று கூறலாம்.

வழிபாட்டின் மூலத்தத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் நாம் அத்துறையில் ஒன்றும் சாதிக்க முடியாது. உழைத்து, உண்டு உறங்குவது போன்று வழிபாடு என்பது வழக்கமாகச் செய்யக் கூடிய சடங்கல்ல. வழிபாட்டிற்கென ஒரு குறிப்பிட்ட நேரமோ சந்தர்ப்பமோ இடமோ வரையறுத்துக் கூறமுடியாது.

காலையில் எழுந்தோம் - கண்ணைத் துடைத்தோம் கடவுளின் பெயரைச் சொல்லிக் கன்னத்தில் போட்டுக் கொண்டோம் என்ற முறையில சிலரது வழிபாடு அமைந்து விடுகிறது.

"கடைக்குட்டிக்கு இன்னும் கல்யாணமாகவில்லையே! கையில் பணமுமில்லையே! கருணாகரா! கண் பார்! என் கவலையைத் தீர்த்துக் காப்பாற்று" என்று கடவுளை வேண்டுவதும் வழிபாடல்ல. அரிசி ஆறு அவுன்ஸாகி விட்டதே, ஆண்டவனே வழிகாட்டு" என்று கூவுபவனும் வழிபடுவோனல்ல.

பரம்பொருளுக்கும் சாதாரண மனிதனுக்கும் உள்ள இடைவெளியைப் படிப்படியாகக் குறுக்கிக்கொண்டு செல்லப் பாடுபடுவோன் அத்துறையில் வெற்றி காண உபயோகித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் தொகுதியே வழிபாடு என்பது.

---

**பிறவித்ர வெள்ளுல் பேதகம்பண்ணுதே**
**துறவியானவர்கள் சும்மா யிருப்பார்கள்.**

பரம் பொருளுடன் இரண்டறக் கலத்தலையே தனது ஒரே லட்சியமாகக் கொண்டு, பயனேதுங்கருதானாய் பரமனை நெருங்குபவனே உண்மையில் அவனை வழிபடுவோன் ஆவான். அவன் கையாளும் முறைகளே உண்மையில் வழிபாடு ஆகும்.

இலட்சிய வாதிக்கு உலகமே ஒரு ஆலயமாகும். அதுவே அவனுடைய வழிபாட்டுக் கூடம். அன்றாட வாழ்க்கையில் அவனுக்குக் கிடைக்கும் அனுபவஞானம் இறைவன் சன்னதியில் அவனைத் தானாகவே மன்றாடச் செய்யும்.

நம்முடைய தினசரி வாழ்க்கை அனேக சந்தர்ப்பங்களாலாகியது. ஒவ்வொரு சந்தர்ப்பமும் நமக்கு ஒருபடிப் பிணையைக் கொடுக்கிறது, நமது புலன்களுக்குத் தோன்றும் எந்த ஒரு உருவமும், உணரப்படும் ஒவ்வொரு சம்பவமும் இறைவனை நமக்கு ஞாபகப்படுத்துமாறு நமது மனம் அமையப் பெறவேண்டும். இம்மாதிரி இறைவனையும் நம்மையும் பிணைக்கும் ஒரு சங்கலித் தொடரே வழிபாடு என்பது! அக ஆராய்வு உள்ளவர்களுக்கே இம்முறை விளங்கும்.

எல்லோரும் அக ஆராய்வில் இறங்குவது எளிதல்ல. ஏனெனில் சிந்தனையை உள் முகமாகத் திருப்பி, தன்னையும் இறைவனையும் தனித்தும் ஒன்றாயும் காணும் வாய்ப்பு உண்மையில் பிறவிப் பயனேயாகும். அத்தகைய சக்தி படைத்தவன் மகத்தான அதிர்ஷ்டசாலி. அவன் சீக்கிரமே ஆன்ம சாம்ராஜ்யத்தில் ஜெயக்கொடியை நாட்டிவிடுவான்!

---

**பிச்சையெடுத்தாலும் பிறவிதொலையாதே**
**இச்சை யற்றவிடம் எம்நிறைகண்டாயே.**

அத்தகைய வாய்ப்பபை எல்லோரும் அடைவதில்லை - அடையமுடியாது என்பதற்காகவே பொதுவாக மக்களுக்கு மூர்த்தி வழிபாடு வற்புறுத்தப்பட்டது.

சாதாரண மனிதன் அபிலாஷைகளும், கொள்கைகளும் அனேகமாக இவ்வுலகத்திலேயே அடங்கி விடுகின்றன. தன்னுடைய தேவைகள் பூர்த்தியாகாத பொழுது அவன் அலகலாப்பையும், சுக வாசனை வீசும் பொழுது இன்பத்தையும அடைகிறான். துன்பம் அனுபவிக்கும் பொழுது மட்டுமே அவனுக்கு இறைவனைப் பற்றிய சிந்தனை சிறிது ஏற்படுகிறது. அந்த சமயத்திலும் அவன் இறைவனை ஒரு குற்றவாளியைப்போல - அல்லது தன்னிடம் கடன் வாங்கி விட்டுத் திரும்பிக் கொடுக்காதவனைப் போல "கடவுளே! எனக்கு சுகத்தைக் கொடுக்கவில்லையே! எனக்கு செல்வத்தை மறந்துவிட்டாயே! என் மகனுக்குப் பள்ளிக்கூடத்தில் இடங்கொடுக்கவில்லையே!" என்று நிந்தாஸ் துதியாகத்தான் வேண்டுகிறான்.

பாமரமனிதனை இவ்வறியாமைப் பேயிலிருந்து காப்பாற்றிப் பரமனுடைய நினைவை அவனுக்குப் படிப்படியாக ஊட்டுவதற்காகவே மூர்த்தி வழிபாடு கூறப்பட்டது. மூர்த்தி வழிபாடு என்பது மனிதன் தினசரி தன்னுடைய ஓய்வான நேரத்தை தனக்கு இஷ்டமான ஏதாவது ஒரு தெய்வத்தின் உருவத்தை அதற்கென அமைந்த கிரமப்படி மனத்தால் தியானித்து அவ்வுருவைத் தன்னுருவால் வணங்குவதில் செலவழிப்பதேயாம்.

இம்மாதிரி அவன் மூர்த்தி வழிபாட்டைத் தன்னுடைய அன்றாட வேலைகளில் ஒன்றாக ஆரம்பித்து நடத்தி

---

**தோன்றும் வினைகளெல்லாம் சூனியங்கண்டாயே**
**தோன்றுமற் றேன்றிவிடும் சுத்தவெளிதனிலே.**

வரும்பொழுது நாளாவட்டத்தில் அவனையுமறியாமலேயே அவ்வுருவத்தினிடத்தில் பாசமும் பக்தியும் ஏற்படுகின்றன. உயிரற்ற அவ்வுருவம் அவனுடைய பக்தி சிரத்தையால் உயிர்பெறுகிறது! தனக்கு ஏதாவது நேரும்பொழுது அவ்வுருவத்தை நோக்கி இறைஞ்சுபவன் படிப்படியாக அடைக்கல உணர்வால் உந்தப்பட்டு இறுதியில் அடைக்கலப் பொருளையே அடையவும் கூடும்.

தன்னுடைய பக்தியாலும் நம்பிக்கையாலும் உயிரற்ற துரோணாசாரியாரின் சிலையால் வித்தைகற்று இலட்சிய சித்தி பெற்ற ஏகலைவன் சரித்திரமும், திருக்கண்ணப்பரின் திவ்விய வரலாறும நமக்கு இவ்வுண்மையை விளக்குகின்றன. உயிரற்ற ஒரு உருவம் மனிதனால் உயிரூட்டப்பட்டு சக்தியும் பெறுகிறது! இதையே மூர்த்திகரம் என்கிறோம்.

பல்லாயிரக் கணக்கான பாமர மக்களின் வாழ்க்கையில் தெய்வீக உணர்வைப் பெருக்கவும், ஆத்ம சிந்தனையை வளர்க்கவும் வேண்டியே ஆயிரக்கணக்கான ஆலயங்களும், மடங்களும், இன்னும் பல மத ஸ்தாபனங்களும் நம் நாட்டில் தோன்றின.

இந்த மதஸ்தாபனங்களில் அவரவர்களுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு இஷ்டமான மூர்த்தியை வழிபடுவதற்கு நூற்றுக்கணக்கான விக்ரகங்கள் அமைக்கப்பட்டன. பஞ்சமா பாதகனாயிருந்தாலும் அவன் ஆலயத்தில் தன்னை மறந்து மூர்த்தியை வழிபடும்பொழுது, உள்ளம் உருகி உத்தமனாய் - உணர்ச்சிப் பிரவாகமெடுக்க பக்தியுடன் தலை வணங்கி நிற்றலைக் காண்கிறோம்.

---

நல்ல வழிதனை நாடு, எந்தநாளும் பரமனை நத்தியே தேடு [டாடு
வல்லவர் கூட்டத்திற்கூடு, அந்த வள்ளலைநெஞ்சினில் வாழ்த்திக்கொண்

சமுதாயத்தில் மனிதர்கள் பல வகைப்பட்டவர்கள். வெவ்வேறான தன்மை வாய்ந்தவர்கள். எனவே இவர்களுடைய மனமும் வெவ்வேறு விதமாக அமைந்திருக்கிறது. இம்மாதிரி பல்வேறுபட்ட உள்ளங்களைப் பல்வேறு விஷயங்களில் கவரச் செய்து அந்த வழியிலேயே அவற்றை இறைவன்பால் திருப்புவதற்கான அமைப்புகள் நமது ஹிந்துமத சமுதாயத்தில் அமைந்திருப்பது, நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

இம்மாதிரி ஆலயங்களிலும், மடங்களிலும் மூர்த்தி வழிபாட்டினால் **இறையுணர்ச்சியைப்** பெற்ற மனிதன் கொஞ்சங் கொஞ்சமாக உலகத்தில் உள்ள எல்லாமே இறைவனின் தோற்றமே என்பதை உணர ஆரம்பிக்கிறான் "**அவனன்றி ஓரணுவும் அசையாது**" என்பதின் உட் கருத்தை அவன் தெளிவாக தரிசன ரீதியாக உணரும் பொழுது அவனுக்கு வாழ்க்கையே ஒரு வழிபாடாக அமைந்து விடுகிறது ; வாழ்க்கை வேறு, வழிபாடுவேறு என்ற எண்ணம் மறைந்து விடுகிறது. வாழ்க்கையிலேயே வழிபாடு அமைந்திருக்கிறது. வாழ்க்கையும் வழிபாடும் ஒன்றுதான் என்று அவன் தெளிவாகத் தீர்மானிக்கும் பொழுது, தான்வேறு கடவுள் வேறு என்ற எண்ணமும் அழிந்து விடுகிறது: அப்பொழுது அவன் பூரணனை அடையத் தகுதி பெற்றவனாகிறான்.

இம்மாதிரியான வழிபாட்டு உணர்வை பாமர மக்களிடையே ஊட்டுவதற்கு ஆலயங்கள்-மடங்கள் முதலிய மதஸ்தாபன நிர்வாகிகள் உதவிபுரியவேண்டும். ஏனென்

---

**மயில்வென்றனில் வந்தருளுங்கன பெரியோனே**
**பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே.**

றால் உண்மையான வழிபாட்டை உணர்த்துவதற்காகத் தான் மேற் கூறிய மதஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் உணரவேண்டும். இந்த ஸ்தாபனங் கள் மக்களுடைய வாழ்க்கையில் உண்மையான வழி பாட்டைக் காண உதவவேண்டும்.

# ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

## 17-ஆம் பை

V. S. வேங்கடராமன்

### கொக்கும் அதன்குத்தும் அதுகண்டகூடும்.

மூவுலகுங் காப்பவராம் அப் பலராம கோபாலர், தம் தோழரோடு காலையுணவாம் கட்டுச்சோற்று மூட்டைகளை யும் எடுத்துக் கொண்டு கன்றுகளை நாடோறும் மேய்த்து வரலாயினர். ஒருநாள அவர்கள் கன்றுகளை மேய்த்து விட்டு அக்கன்றுகட்கு ஒரு குளத்தினில் தண் ணீர் காட்டித் தாமும் அந்நீரை அள்ளிப்பருகித் தாகந் தணிந்தனர். தண்ணீர் காட்டித் தாமுங் குடிக்கும் அந் நேரத்தில் கண்ணனைக் கொல்லவே ஓர் அசுரன் பெரிய மலையென யாவரும் அஞ்சப் பெரிய கொக்குப்பறவையாக வேடம்பூண்டு வாடி நின்றுகொண்டிருந்தான். நீரருந்திக் கரையேறின கண்ணபிரானை ஒரே விழுங்காக அக்கொக் கசுரன் விழுங்கிவிட்டான். கொக்குக்குக் கக்கக்கூடாது என்று எண்ணம். கண்ணபிரானுக்குத் தொண்டைக்குக் கீழே போகக்கூடாது என்கிற எண்ணம். அதனல்,

---

அமிழுருந்தன் மெச்சுற்ற பண்பின் மடுகோனே
உன்க்ருபைச் சித்தம் என்று பெறுவேனே,

நெருப்புப்போல அக்கொக்கின் அடிநாக்கைச் சுட்டுக் கொண்டிருந்தார் கண்ணபிரான்.

**நெருப்புக்கும் நெருப்பு அக்கண்ண பிரான்**

இதற்கிடையில் பலராமன் முதலானவர் செய்வதின்னது என்று தெரியாமல் திகைத்தார்கள். கண்ணா என்று அலறினார்கள். மூர்ச்சையாய் விழுந்து பிறகு தெளிந்தெழலாயினர். கொக்குத் தோற்றது.

வெந்த சூடு ஆறுமதுள்ள கிழங்கை வாயினில் போட்டவன் உடனே கக்குவது போலச்சூடு பொறுக்கமாட்டாமல் கொக்கு தன் தொண்டையினின்றும் கண்ணனைக் கக்கி விட்டது கக்கினதும் ஆத்திரம் மேலிட்டு அக்கண்ணனை மூக்கினால் குத்துவதற்குத் திரும்பி ஓடிவந்தது. உடனே

**கொக்கு கிழிக்கோரை ஆனது**

அக்கண்ணன் தன்னிரு கைகளால் மேல் அலகுமடலையும், கீழ்அலகு மடலையும் (கொக்கின் மூக்கை) பிடித்துக் கோரையைக் கிழிப்பது போல் விளையாட்டாகக் கிழித்து விட்டெறிந்தார். கண்ணனது தோழர்கள், கம்ஸனது தோழன் கதி இப்படி ஆயிற்று என்று கை கொட்டிச் சிரித்தார்கள். தேவர்கள் மல்லிகை மலர்மாரி பெய்தனர். முரசமார்த்தன. சங்குகள் முழங்கின. பிறகு அச்சிறுவரனைவரும், கன்றுகளை ஆயர்பாடிக்கு ஓட்டி வந்தவராகித் தங்கள் வீட்டாரிடம், கண்ணன் தப்பிப் பிழைத்ததையும், அக்கொக்கு மாண்டதையும் பற்றிச் சொல்லி மகிழ்ந்தனர். அவ்விடையர் எல்லாரும், கண்ணனை ஆவலுடன் பார்த்து மகிழ்ந்தனர். பிறர்க்கு முதலில் பயத்தை யுண்டாக்கியதனாலல்லவோ அவ்வசுரர்

போத வஞ்சிவ சங்கரன் கொண்டிட மொழிவோனே
அன்பொடுவாழ நிதம்புனையும் பதந்தந்து உனது அருள்தாராய்.

களுக்கே பல கஷ்டங்கள் உண்டாயின என்று சொன்னார்கள்.

இவர்கள் எல்லோராலும் இக்குழந்தையைத்தான் புறுத்த முடிவதில்லை. 'கொல்லும் எண்ணத்துடன் வந்து, நெருப்பில் விட்டில்பூச்சிகள் போல் இவனிடஞ்சாகின்றனர். நிறைமொழி மாந்தர்களது மொழிகள் ஒரு காலத்திலும் பொய்யாக மாட்டா வல்லவோ! கர்க்க முனிவர் சொன்னது அப்படியே அனுபவத்தில் காணப்பட்டதல்லவோ. ஆச்சரியமில்லையா? இவ்வாறாகக் கண்பொத்தி ஒளிந்து விளையாடுதல், மறைந்துபிடித்தல், அணைகட்டுதல், குரங்குகள் போலத் தாவிக் குதித்தல் முதலிய ஐந்தாம் பிராயம் வரைக்கும் காணப்படும் விளையாட்டுக்களுடன் "கௌமாரம்" என்ற பருவங்கடந்து "பௌகண்டம்" என்ற நிலையான ஆறும் பிராயம் எய்தினர்.

## "வனபோஜனமும் பிரமாநந்தமும்"

ஒருநாள் கண்ணபிரான், வனபோஜனத்திற்காகத் திட்டஞ் செய்தவராய் விடியற் காலையிலேயே கொம்பூதி வல்லாத் தோழர்களையும் அழைத்துக் கொண்டு, தின் பண்டங்களுடைய மூட்டைகளையும் எடுத்துக்கொண்டு கணக்கில் அடங்காத கன்றுகளை முன்விட்டுக் கொண்டு வெளிக்கிளம்பினர். பதினாயிரக் கணக்கில் வந்த அன்பர்கள் நூறாயிரக் கணக்கான தங்கள் தங்கள் கன்றுகளை முன்விட்டுக் கண்ணபிரானைப் பின்றொடர்ந்தனர் ஒவ்வொருவருக்கும், அழகிய உரிஒன்றும், மாடுகளை ஓட்டப் பிரம்பு ஒன்றும், கொம்பு என்ற பிலிலும், புல்லாங்

---

**சங்கரன் பங்கிற் சிவைபாலா**
**உனைநாளும் கண்டுகொண்டு அன்புற்றிடுவேனே.**

குழல் ஒன்றும், தனித்தனி அடையாளப் பொருள்களாய் இருந்தன. பொற்சங்கிலி வடமும், முத்துச் சரங்களும், அரதன மாலைகளும, பவழ மாலைகளும், அணிந்தவரான போதிலும், காட்டுப்பழங்களையும், தளிர்களையும், மயிலிற குகளையும் கொண்டு தொடுத்த மாலைகளாலும் வனமாலை களாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டார்கள்.

**வனமகோற்சவிழா நிகழ்ச்சி**

பிறருடைய பிரம்பு, குழல் முதலானவற்றை அவர் அறியாமல் எடுத்து ஒளித்து வைப்பர். அறிந்தால் அவற்றைத் தூரத்தில் விட்டெறிந்துகொண்டே போவர். அழுகிறவரைக் கண்டு சிரிப்பர். சிரிப்பவரைக் கண்டு மேலும் இடிச்சிரிப்புச் சிரிப்பர். ஒளித்த பொருள்களையும் எறிந்த பொருள்களையும் சின்னேரங்கழிந்தபின் உடையவரிடஞ்சேர்ப்பித்துவிடுவர். இவ்விதம் அவ்வன்பர் விளையாடிக் கொண்டே எல்லோருக்கும் முன் செல்லுங் கண்ணனை "நான்முந்தித் தொடுவேன்" என்று போட்டியிட்டவராய்ப் பின் றொடர்ந்து ஓடினார்கள்.

(தொடரும்)

## அடியார் ஞாயிறு திருக்கூட்டம்

### சென்னை

சென்ற ஞாயிறு (10-9-1950) வழக்கம்போல் காலை 8 மணிக்கு சென்னை மல்லீஸ்வரர் கோயிலில் தொண்டர் குழாம் கூடிற்று. வழக்கம்போல் அடியார்கள் இரண்டாயிரத்துக்கு மேல் கூடினர். எதிர்பாராத சிலரும் சேர்ந்தனர். திருப்புகழ்மணி சீர்பாத வகுப்பின் விளக்க உபந்

---

**சந்ததம் பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா**
**தண்டையங் கழற்குத் தொண்டு கொண்டு அருள்வாயே.**

யாஸத்தை 32 வாரங்களாகச் செய்துவந்து, 10-9-1950 ஞாயிற்றுகிழமை தினம் முடித்து வேலைக்காரன் வகுப்பைக் குறித்து விளக்க உபந்யாஸம் ஆரம்பித்து விட்டார். முருகன் சரணத்தின் அழகிலும், அன்பிலும், அருளிலும்ஈடுபட்டிருந்த தொண்டர் குழாத்தின் அனுப வம்கரைகடந்து நின்றது. பக்தியில் தோய்ந்து முருகன் நாமத்தைச் சொல்லிக் கொண்டு, அன்பினால் உகுத்திடும் கண்ணீர் என்னும் வீழ்அருவியில் முருகன் முழுகுகின்றான் என்றும், அவ்வருவியின் துறையிலேயும் அவ்வருவியின் நீர்பாய்ந்து வளர்க்கப்பட்ட ஜீவனெனும் பசுந்தினை பருகேயும், அதன் உள்ளப் புனத்திலும் உலாவுவதும் முருகன் சரணம் என்னும் அருணகிரி பாவத்தை சித்தரிக்குங்கால் அன்பர் குழாத்தில் பேரின்ப அனுபவம் விண்ணளாவி நின்றது. எல்லாம் முருகன் அருள். தொண்டர் குழாம் வாழ்க. எங்கும் ம்குக.

ஆசிரியர்

## விதியும் மதியும்

(ராமன்)

விதி என்பது, பூர்வத்தில் செய்த செயல்களாலும் நினைத்த எண்ணங்களாலும், பலன் அடையாமல் நின்று இமமையில் அப்பலன்களை கொடுப்பது. மதி என்பது தற்பொழுது நினைக்கும் எண்ணங்களும், செய்யும் செயல் களுமே ஆகும். இதை முயற்சி என்றும் சொல்வார்கள்.

'விதியை மதியால் வெல்லலாம்.' 'விதியே மதியாய் விடும்'; என்பது இரு பழைய மொழிகள். அனுபவத்தில்

---

**என்சிந்தைப் புந்தி மயக்கந்துறக்க**
**நின்தண்டைப் பத்ம மெனக் கென்றருள்வாயே.**

பார்க்குங்கால் "விதியே மதியாய்விடும் என்பது உண்மையாக இருக்கிறது. உதாரணமாக: ஸ்ரீ ராமர் காட்டில் வசிக்கும்பொழுது, தங்கமான் வர, அதை சீதாதேவியார் தனக்குப் பிடித்துத்தர வேண்ட, ஸ்ரீ லக்ஷ்மணர், அது உண்மையான மானல்ல; மாய மான். மாரீசன் மாயாவி; அவன்தான் இவ்வுருவம் கொண்டு வந்திருக்க வேண்டும்; என்று சொல்ல, ஸ்ரீ ராமர் அதைப் பொருள் படுத்தாமல் மானைப் பின் தொடர்ந்தார்., இங்கு யூகிக்கத்தக்க விஷயம் ஒன்று. அதாவது ஸ்ரீ ராமர் ஸ்ரீ லக்ஷ்மணர் சொன்னதைக் கேட்டு நின்று இருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதுதான். இந்த இடத்தில் விதியே மதியாய் விட்டது. அச்சமயத்தில் விதி ஸ்ரீ ராமருடைய மதியைத் தன் வசமாக்கிக் கொண்டது என்று கூறுகிறார்.

சாதாரணமாகப் பார்க்குங்கால், எந்தப் பெரியவரும் விதியை விலக்கினவர்களாகவும், அதை மாற்றிக்கொண்டவர்களாகவும் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அதை அறிந்து அதற்கு உகந்தபடி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

விதி என்பது வில்லிலிருந்து விடப்பட்ட அம்பு என்றும, அது விடப்பட்ட வேகத்திற்குத் தக்கவாறு குறிப்பிட்ட இடத்தை அடையும் என்றும் சொல்லப்படுகிறது. அதை தடுக்க முடியாதல்லவா. ஆகையால்தான் பிரபஞ்சத்தை அனுபவித்தே தொலைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். மதியால் விதியை வெல்லலாம் என்பதைப் பின்னால் கவனிப்போம்.

---

**இசைத்திடுஞ் சந்தபேத மொலித்திடுந்**
**தண்டை சூழும் இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே.**

# தில்லை நடராஜப்பெருமான் (1)

(வைசம்பாயனன்)

திருக்கோயில்களும், தலங்களும நிரம்பப் பெற்றது தமிழ் நாடு. அவற்றினுள் தமிழ் மொழிக்கே ஓர் தெய்வீக உயர்வையளிக்கும் வகையில் தமிழ் மணம் கமழ்ந்ததும் மற்றும் பல வற்றாலும் சிறப்புற்று விளங்கிவரும் தலம் திருத்தில்லை யெனும் சிதம்பரமும், அங்கு வீற்றிருக்கும் நடராஜ மூர்த்தமுமாகும்.

இவற்றினைப் பற்றி விவரிக்கப்படுமுன், ஆலயங்களைப் பற்றியும் விக்கிரக ஆராதனையைப்பற்றியும் பொதுவாகச் சற்றுக் கவனிப்போம்.

## Symbolic Worship

இனம் இனத்தை நேசிப்பது இயற்கை. தாவரங்களும் ஜீவராசிகளும் அப்படியே. மரத்துடன் மரம் ஒட்ட வைத்தல் மூலம் ஒட்டு மா பயிராகிறது. சில மரங்கள், கொடிகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வளர்கின்றன. பூனை, ஆடு, மாடு முதலியவை தத்தம் இனத்துடன் அன்புகொண்டு பழகுகின்றன. இது இயற்கை. இவ்வாறன்றி, சர்க்கசுகளில் காண்பதுபோல் ஓர் புலி ஒரு மாட்டுடன் அல்லது ஆட்டினுடன் சேர்ந்து பழகினால் அது இயற்கையாகாது. செயற்கையாகும்.

2 அஃதேபோல் மனிதன் மனிதனிடம் விசுவாசம் கொளல் இயற்கை. பகுத்தறிவுபடைத்த மனித வர்க்கம் அத்தகைய விசுவாசம் அல்லது அன்பு

---

உளமுருகிவரு மன்பிலன் தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந்து அன்புருதே.

பெருகப் பெருக ஒருவர்க்கொருவர் போற்றத்தலைப் படுகிறார்கள். நேரில் சந்திக்கும்போது மட்டில் ஏற்படும் இத்தகைய போற்றுதலைத் தொடர்ந்து ஒருவரையொருவர் சந்திக்காதபோது, வாயளவில் போற்றிக்கொள்கிறார்கள். தொடர்ந்து அடுத்தபடியாக ஒருவர் மற்றவரது ஏதாமொரு சின்னத்தை (அடையாளத்தை) வைத்துப் போற்ற முற்படுகிறார்கள். இவ்வாறு ஒருவரது ஞாபகார்த்தமாக மற்றவர் வைத்துப் போற்றும் சின்னங்கள் பல வகைப்படும். கையெழுத்து முதல், புகைப்படம், உருவச்சிலை வரையிலும் என்க. புகைப்படம் இக் காலத்தியது எனினும் முந்திய காலங்களில் சிறந்த ஓவியங்கள் வரையப்பட்டுப் போற்றப்பட்டு வந்தன.

3 கிறிஸ்தவர் கோயிலில் கிருஸ்துவின் சிலையையோ, அல்லது அவரது சிலுவையையோ (cross) போற்றுகிறார்கள். முகம்மதியர்கள் கைவிரல்களையும், பிறையையும், நட்சத்திரங்களையும் போற்றுவதுடன் தம் அங்கிகளிலும் அச் சின்னங்களைத் தரித்தும் வருகிறார்கள். சீக்கியர்கள் தமது "கிரந்தம்" நூலைவைத்துப் போற்றுகிறார்கள். இவ்வாறாக ஒருவர் மற்றவரது நினைவு நிமித்தம் அவரது ஏதாமொரு சின்னத்தை வைத்துப் போற்றுவதையே "சின்ன வணக்கம்" (Symbolic Worship) என்று கூறப்படுகிறது. இம் முறை புதிதல்ல. இயற்கையாக தொன்று தொட்டு வரும் ஓர் பழக்கம்.

---

அறிவினோர்கரு தங்கோன் சிலம்பாணி
உபயசீதள பங்கய மென்கழல் தருவாயே.

பலவித சின்னங்களில் எது இயற்கைக்கும், விருப்பத்திற்கும் பொருத்தமானது என்பது கவனிக்கத் தக்கது.

## பக்தியும் இசையும்

[ஸ்ரீ த்யாகப்ரும்ம, தெய்விக, சங்கீத இசைப் பொருள் விளக்கம்]

(கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை)

| | |
|---|---|
| 22-வது கர்த்தா | ராகம் : ஸ்ரீ ரஞ்சனி |
| கரஹரப்ரியாவில் ஜன்யம் | தாளம் : ரூபகம் |
| உபாங்க ராகம் : | சம இடத்தில் ஆரம்பம் |
| ஷாடவ, பஞ்சம வர்ஜ்ஜிய | ஆ : ஸரிகமதநிஸ் |
| ராகம். | அ. ஸ்நிதமகரிஸ |

பொதுவாக இந்த ராகத்தில் பஞ்சமம் வர்ஜ்ஜியமானதால் நிறைந்த ஆச்சர்ய பாவரஸம் ததும்பிய ராகமாகும்.

இந்த ராகத்தைத் தமிழர்கள் படுமலைப்பாலைப்பண், இயல், இலக்கண ராகமென்று குறிக்கின்றார்கள்.

மற்றும் இந்த ராகத்தின், அவரோஹணத்தை, வக்ரமாக, (ஸ்நிதமரிகரிஸ,) என்று கூறும் மதமும் இருக்கின்றது. ஆனால் தற்போதைய மரபு, (ஸ்நிதமகரிஸ,) என்றுதான் எல்லோரும் பின்பற்றி வருகிறார்கள். ஆயினும், (ரிகரிஸ) என்னும் வக்ர சஞ்சாரத்தில் ஸ்ரீ ரஞ்சனியின் பாவ, தத்துவம், நன்கு தொனிக்கப்படுகின்றது.

பல்லவி

ஸொகஸூகா ம்ருதங்க தாளமு ஜத கூர்சிநிநு

ஸொக்க ஜேயு தீரு டெவ்வடோ (ஸொ)

---

பத்தியும் அறிவும் போயச் சங்கைப்
படுதுயர் கண்பார்த்து அன்புற்று அருளாயே.

### அனுபல்லவி

நிகம ஶிரோர்தமு கல்கிந நிஜ
வாக்குலதோ ஸ்வரஸாத்தமு தோ (ஸொ)

### சரணம்

யதி விஶ்ரம ஸத் பக்திகி ரதி த்ராக்ஷா ரஸ நவரஸ
யுத க்ருதிசே பஜியிம்சு யுக்தி த்யாகராஜுனி தரமா
(ஸொ)

### கருத்துரை விளக்கம்

**ஸோகஸுகா ம்ருதங்க தாளமு ஜத கூர்சி நினு**:— இசைக்கு வேண்டிய இலக்கண அழகு பொருந்த ம்ருதங்கத்தை அழகாகச் ச்ருதி சேர்த்துக்கொண்டு, தாள வாத்யத்தையும் (அதாவது ஜாலராவையும்) அந்த ச்ருதிக்கு ஒவ்விய முறையில் ச்ருதியோடு ஒன்றிய ஒலி உடைய தாளத்தையும் வைத்துக்கொண்டு, ம்ருதங்கமும், கஞ்சக் கருவியாகிய தாளக்கருவியாம் ஜாலராவையும் ச்ருதி ஒன்றாக இருக்கும்படி ஜதையாக இணைத்து; ('நின்னு ஸோக்கஜேயு') உனது நாமத்தை அந்த ச்ருதியுடன் துல்லியமாக இணைத்துப்பாடி, உன்னை மயங்கும்படியாகச் செய்யும் ('தீரு டெவ்வடோ') தைர்யசாலி எவனோ அவனே பாக்யவான்.

**'நிகம ஶிரோர்தமு கல்கின'**: வேதங்கட்குச் சிகரமாய் உள்ள உன்னுடைய உண்மைத் தத்துவத்தைப் பின்பற்றியவனாய் ('நிஜ வாக்குலதோ') மனத்தில் ஒன்று

---

செகச்செஞ் சோதியு மாகிய மாதவன் மருகோனே
அதிக்கஞ் சேர்தர வேயருளால் உடன் இனிதரன்வரய்

வாக்கில் ஒன்று என்கிறமாதிரி இல்லாமல், மனமும் வாக்கும் ஒன்றாக ஒன்றியதான வார்த்தைகளால் (**'ஸ்வர ஸுத்தமுதோ'**) வரி வடிவத்தில் இணைந்த (ஸரிகமபதநி) என்னும் பஹிர் முகத்தோற்ற ஏழு ஸ்வரங்கள் வாயிலாகவும், அதனின் அந்தர் முகத்தோற்றமாகிய இந்த நிலையென்று நிச்சயிக்க முடியாத, ஆனால் பாவ ரஸங்களின் கருத்தொருமித்த எண்ண உணர்ச்சியின் வாயிலாகச் செல்லத் தக்க, பரம நுண்ணிய ஒலிக் கூட்டங்களாகிய, ஸ்வரங்களின் வாயிலாகவும், நுண்ணொலிகளின் வாயிலாகவும், பரம நுண்ணிய வாயிலாகவும், கொஞ்சங்கூடத் தவறுதல் இல்லாமல், பரம ஸுத்தமாக இசைக்கலையோடு உனது நாமத்தை பாவ பேதமன்னியில் இணைத்துப் பாட வல்ல தைர்யசாலி எவனோ அவனே பாக்யவான்.

**'யதி விஸ்ரம ஸத் பக்திநிரதி :** இசைப்பாட்டிற்கும் மற்ற இலக்கணப் பாட்டிற்கும் ஒன்றியதான இலக்கணங்களையுடைய (அதாவது) யதி, ப்ராசம், எதுகை மோனை, சீர், அடி, தொடை, தளை, இத்துடன் இசைப்பாட்டிற்கு வேண்டிய இசைச் சொற்களாகிய, இசைக்கு ஒவ்விய, மெல்லோசையைத் தருவதற்கு ஒலி எழுத்துக்களால் இணைக்கப்பட்ட, சொற்களால் இணையப் பெற்ற இசைப் பாட்டினை, உண்மையான பக்தியுடன், மிகுந்த ஆவலோடு கூடவும்; (**'த்ராக்ஷா ரஸ நவரஸ'**) த்ராக்ஷைப் பழத்தின் ரஸம் போன்ற மென்மையான ஜலரூபமான தன்மையில் அந்த ரூபத் தன்மையிலேயே ஒன்பது பாவ உணர்ச்சி வெளியீட்டையும் பிணைத்து (**'யுத க்ருதிசே பஜியிம்சு யுக்தி'**) உன்னுடைய கீர்த்தியை உண்மைத் தத்துவத்தின்

---

**வேலைமேல் கண்வளர்ந் தாதிமாயன்றனன் மருகோனே**
**ஆர்வஞ்செயந் தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்.**

படி இசையோடு இணைத்துப்பாடும் மிக நுண்ணியதான பாக அறிவுறத்தின், மாக்ஷி அழகு ('த்யாக ராஜ-மித்ரமா') இந்த தியாகராஜனுக்கு முடிந்த காரியமா, என்று இந்த கீர்த்தனத்தில் இசைப்பாட்டென்பது இப்படியெல்லாம் இலக்கணங்கள் அமைந்ததாக இருக்க வேண்டுமென்று சொல்லாமற் சொல்லி விநயமாக உணர்த்துவதோடு, ஏதோ வாயில் வந்ததெல்லாம் இசைப் பாட்டு என்றும், இசை எந்தக்கடையில் கிடைக்கும் என் றும்கேட்கும் பக்குவத்தில் உள்ளவர்கள எல்லாம் இசைப் பாட்டு இயற்ற ஆரம்பித்து விட்டவர்களைக் கண்டு மனம் பொறுதவராய், மிகவும் மனம் நொந்து, இப்படிப்பட்டவர் களுக்கு அறிவு வருவான் வேண்டி இதற்குத் தன்னையே இலக்காக வைத்து, இப்படிப்பட்ட யோக்யதைகளோடு என்னால் இசைப்பாட்டியற்றி உன்னை மயங்க வைக்கச் செய்யும்யோக்யதைத் தன்மை எனக்கு உண்டாஎன்று மறைவாக உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம்.

கருத்துள்ளுரை

**இந்தக் கீர்த்தனத்தில்** ஒரு நுண்பொருள் ஒன்று உளது. அவை யாவை யெனின், ராமபக்தராகிய த்யாகப்ரும்மம், எந்தக் கடவுளுடைய பெயரை யுமே குறிக்காது பொதுவாக, (நின்னு) என்று நாம ரூப மில்லாமல் அந்த தத்துவத்தைப் பேசி எல்லா நாமரூபமும் நீயே என்னும் உண்மைத் தத்துவத்தை விளக்கப் பேசி இருக்கிறார் கவனிக்கவும்.

மற்றும், இசைப் பாட்டென்பது, இப்படி இருக்க வேண்டும் என்றும், இசைப்பாட்டு இயற்றுவோன்

---

**கங்கை சூடும்பிரான் மைந்தனே கந்தனே விஞ்சையூரா**
**நின்சொருபம் ப்ரகாசங்கொடே வந்துநீ அன்பில் ஆள்வாய்.**

இன்னின்ன யோக்யதை உடையவனாய் இருக்கவேண்டும் என்றும், மேலும் இன்னின்ன கருவிகளைக் கொண்டு இன்னின்ன வகையில் இணைத்துப் பாடும் திறன் உடையவனாக இருக்க வேண்டும் என்றும், வற்புறுத்தி உபதேசித்து விளக்குகிறார் த்யாகப்ரும்மம்.

அதனில், ச்ருதியோடு ம்ருதங்கமென்னும் வாத்யத்தை அணுவளவும் பிசகாது சேர்த்துக் கொண்டும், கஞ்சக்கருவியாகிய தாள வாத்யத்தையும் அந்த ச்ருதிக்கு சிறிதளவும் பிசகாத முறையில் உள்ள தாளக் கருவியைத் தேர்ந்தெடுத்து ம்ருதங்கத்துடன் இணைத்துக் கொண்டும், இவை இரண்டினையும் ஜோடியாக இணைத்து உண்மையையே கோஷிக்கும்படியான, வேதங்களுடைய உண்மைப் பொருளின் சிறந்த தத்திவமாய் உள்ள பரம் பொருளை மனத்துள் தனக்கே சொந்தமாக உடைய திறத்திலும், மற்றும், இப்படி இருந்த போதிலும், வாயில் என்னவோ சொல்லிக்கொண்டு மனத்தில் எதையோ நினைத்துக்கொண்டு சொல்லாமலும், வரிவடிவமான எழுத்தோடு இணைந்துள்ள (ஸரிகமபதநி) என்னும் வடிவ எழுத்துக்களுக்குக் கட்டுப்படாத அநேக நுண்ணொலிகளின் வாயிலாகப் பாவரஸம் ததும்ப, அந்தந்த பாவங்கட்கு ஒத்த, ஸ்வர ச்ருதிகளின் துல்லிய தன்மையோடும் இருக்கவேண்டு மென்கிறார்.

மேலும், இயல்பாட்டிற்கும், இசைப்பாட்டிற்கும் வேண்டியதான, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, தளை, முதலிய இனங்களோடும், இன்னும் பல சந்தர்ப்பங்கள் அர்த்தகல்பனை, ஒலிச்சொல், இசைக்குத் தோதாக

---

**துன்பநோய் சிந்த நற்கந்தவே ளென்றுனைத்**
**தொண்டினால் ஒன்றுரைக்க அருள்வாயே.**

உச்சரிக்கச் சுலபமான இணைந்த இசைச்சொற்களாலும் இணைத்து இன்னும் இதற்கு ஒத்த பாவப் பண்பினதான, தாள, கால, கதி, இட, ஜாதி, பண்பு ஒத்த ரூபத்தில் த்ராக்ஷையின் ஜல வடிவமான இனிமை கலந்த ஜலரூபம் போன்ற மார்க்க மென்மைப் பாகத்தில் ஒன்பது பாவ ரஸங்களும் ஒன்ற உனது கீர்த்தியை இணைத்து உன்னைப் புகழ்ந்து இசைத்தோத்திரம் செய்ய வேண்டும் என்கிறார் த்யாகப்ரும்மம்.

மேலும், இம்மாதிரியான தன்மையில் எல்லா இலக்கணமும் ஒன்ற இசைப்பாட்டியற்றி உன்னைத் துதித்து மகிழ்விக்கச் செய்யும் யோக்யதை எனக்கு உண்டா என்று தன்னடக்கமாகப் பேசுவதோடு இப்படிப் பட்ட வல்லமையை உடைய யோக்யதை படைத்த, வீரனும் தைர்யசாலியும் எவனோ, அவன் எங்கிருக்கின்றானோ, உன்னை உண்மையாகவே இம்மாதிரியான இசைப்பாட்டின் மூலமாகத் தோத்தரித்து உன்னை மயங்கச் செய்கின்ற தீரன் என்று இசைப்பாட்டின் தத்துவங்களையும், இலக்கணங்களையும், மொழியில் இசைப்பாட்டிற்கென்று இருக்கும் எல்லா விஷயங்களையும் பேசத்தக்க இசைச் சொற்களையும், மெல்லோசைப் பண்பு பாவ நவரஸ உணர்ச்சி பாவ பாக முறைகளையும் விளக்குகிறார் த்யாகப்ரும்மம்.

**ஸ்ரீ ரஞ்சனி, ராக, அர்த்த, தத்துவ, பாவ, விளக்கம்**

ஸ்ரீ ரஞ்சனி என்றாலே இலக்ஷ்மி தேவியாரே பார்த்து ரஸிக்கும்படியான உருவத் தோற்ற அழகிற்கு அழகான வடிவம் என்று பொருள்.

---

தன்னடைசூழ் கிண்கிணிப் புண்டரீ கத்தனைத்
தந்துநீ அன்புவைத்து அருள்வாயே.

இதனால் இந்த ராக ஒலிச்சேர்க்கை இசைப் பாக பாவ உணர்ச்சி தத்துவமானது மிகுந்த, உயர்வான, நன்மை பயக்கத் தக்க, இதுவரை காணா, ஒன்றைக் கண்டவுடன் அதனைக் கண்டு அனுபவிக்கும் ஆச்சர்ய உணர்ச்சி பாவ ரஸமாகும்.

இதனாலேயே த்யாகப்ரும்மம், அப்பா உன்னை இசை இலக்கணத் தத்துவப்படியெல்லாம் இசைப்பாட்டியற்றித் தோத்தரித்து உன்னை மயங்க வைத்து உன்னுடைய க்ருபைக்குப் பாத்திரமாகும் தீரன் எவனோ என்று அப்படியே ப்ரமித்து ஆச்சர்யப்பட்டுள்ளார் இசை இலக்கண மாக்ஷிப்படி த்யாகப்ரும்மம.

மற்றும் இதே ராகத்தில், ரிகரிஸ, என்னும் வக்ர ஸஞ்சாரத்தில் தம்முடைய எளிமையைக் குறித்து, நான் அதற்குத் தகுதி உடையவனா என்று வருத்தமும் படுகிறார்.

**தாள, கால, கதி, இட, இலக்கண, விளக்கம்.**

இந்த விஷயத்தை, இரட்டிப்பு எண்ணுள்ள ஆறு அக்ஷரத்தில், அதிலும் நடுத்தர காலமான,மத்யம கால நடையில், கதி சதுஸ்ரமான, ஸத்வகுண அமைதியில், இடமும், சாந்தமுமான, சம இடத்தில், ஆரம்பித்து தன்னுடைய எளிமையையும், ஆச்சர்யமான பாவத்திற்கு ஆறு அக்ஷரத்தைக் கொண்டு பேசியும், பேசும் விஷயத்தை நடுமுறையான, அவசரம், நிதானம் என்று இல்லாத மத்தியம நடையில், சத்வகுண அமைதியில், சாந்தமாக ஆரம்பித்து, இயல், இசை, லய, நடை, இட, ஆவர்த்தன இலக்கணங்கள் ஒன்ற உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம், கவனிக்கவும்.

---

**திங்கள்முடிநாதர் சமயக்கார, மந்த்ரவுபதேச மகிமைக்கார**
**உளம்வாடும் அறிவற்றேனை வந்தடிமை யானஇனி எப்போது நினைவாயே**

“ அன்பையுருக்கி அறிவை
அதன்மேற் புகட்டித்
துன்பவலைப் பாசத்தொடக்
கறுப்ப தெக்காலம் ”

ஆயுர்வேதவித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹ்ருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் கிரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 ப்ரேமலெக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனவடல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்

"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.6 (மெடிகேட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சன்னி தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

ஸோல ஏஜெண்டுகள்

யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீ
நெ.1506



ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்


“ஸ்வர்ண மாளிகை”

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—“FAITH” Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. Muthuswamy, 24, Bunder St. Madr